Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்
EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 46

## அறஇலக்கியங்கள் காட்டும் அறச்சிந்தனைகள்

*முனைவர் ச. மாசிலா தேவி*
*உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை*
*ஜி.டி.என். கலைக்கல்லூரி திண்டுக்கல்*
*அலைபேசி - 8508387333*
*மின்னஞ்சல் masilsdevi2@gmail.com*

## முன்னுரை

உலக இலக்கியங்கள் யாவும் அவை தோன்றிய நாட்டின் பண்பாட்டையும் வரலாற்றையும் வகுத்தும் தொகுத்தும் காத்தும் வருகின்றன. மேலும் அந்தந்த நாட்டு மக்களின் வாழ்க்கை நலத்தினைஅறிந்துகொள்வதற்கும் உறுதுணையாக அமைகின்றன. மக்களுக்கு இலக்கணம் கண்ட பெருமை தமிழ்மொழிக்கு மட்டுமே உண்டு. பிறமொழிகளுக்கு இத்தகைய நிலையில்லை.

மக்கள் வாழ்க்கையில் இயல்புகளையும் பிற செய்திகளையும் கூறுவதைத் தமிழ் இலக்கியங்கள் தலையாய பணியாகக் கொண்டுள்ளன. தமிழ்மொழி அகத்தையும் புறத்தையும் இருகண்களாகக் கொண்டது. சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியங்கள் வரை அறத்தைப் பற்றிய செய்திகளைப் பதிவு செய்துள்ளன. இவ்வாறு ஒவ்வொரு காலத்திலும் அறக்கருத்துக்களை எடுத்துக்கூறினாலும் சங்கமருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் அறத்தையே உயிர்மூச்சாகக் கொண்டு விளங்கியுள்ளன.

கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்த சான்றோர்கள் சமூகத்தில் நிகழ்ந்த அநீதிகளை அகற்றவும் மக்களை நல்வழிப்படுத்தவும் நீதிநூல்களை அருளிச் சென்றுள்ளனர்.

அக்காலச் சமுதாயத்திற்கு ஏற்ப அறம் கூறியிருப்பினும் அக்கருத்துகள் எக்காலத்தினரும் எச்சமயத்தினரும் எந்நாட்டினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. இவ்விலக்கியங்கள் வலியுறுத்தும் நீதி போதனைகள் யாவும் மனிதன் வாழ்வியலுடன் ஒன்றியே காணப்பட்டன.

அற இலக்கியங்கள் மனிதனின் அகவாழ்வை மட்டுமின்றிப் புற வாழ்வையும் செம்மைப்படுத்திப் புத்தாக்கம் செய்கின்றன. மனித வாழ்வில் தொய்வு ஏற்பட்டுச் சமூகம் முரண்படும் சூழலில் அற இலக்கியங்கள் இருளை அகற்றும் ஒளிகாட்டியாய்,சமூகத்தினை நல்வழிகாட்டி வழிநடத்தி மீட்;டுருவாக்கம் செய்கின்றன.

## சமூக அமைப்பு

தனித்த நிலையில் மனிதன் வாழ்ந்த போது அவனது நடத்தைகள் சாதாரண ஒன்றாக இருந்தன. தனி மனிதன் பாதுகாப்பற்ற சூழலில் குழப்பமடைந்து வந்தான். இதனால் மனிதன் தன்னை ஒத்த மனித உறவுகளை ஒரு பின்னல் போல அமைத்துக் கொண்டு செயல்படத் தொடங்கினான். இத்தகைய மனித உறவுகளைக் கொண்ட பின்னல்களே சமூகம் எனப்பட்டது. இச்சமூகத்தின் வாயிலாக மனிதன் தன்னைப் பேணிக் காத்துக் கொண்டும், தன்னுடைய உடமை மற்றும் உரிமைகளை நிலைநிறுத்தியும் வந்தான். இச்சமூகம் குடும்பப்பணி, கல்விப் பணி, பொருளாதாரப் பணி, சமயப் பணி, அரசியற்பணி, பொழுது போக்குப் பணி என்பன போன்ற பல்வேறு பணிகளைச் செய்து வந்தமையால் ஒரே அமைப்பாக விளங்கியது. சமூக அமைப்புகள் மனிதனுக்கு வழி வழியாக அதன் தேவையை இயல்பாக உணர்த்தியதுடன் தன்னை மீறாமல் செயல் படவும் செய்தது. இதனால் மனித வாழ்வு ஒரு வரையறையுடன் காணப்பட்டது. சமூகப் பெருக்கம் மற்றும் போதுமான தேவையற்ற நிலை போன்றவைகள் சமூக மீறல்களை உருவாக்கின. இம் மீறல்கள் தானாக உருவாக்கம் பெற்றன. சமூக அமைப்பு, மீறல்களால் சிதைவுறாமல் இருப்பதற்கு நெறிமுறைகள் மற்றும் அறக்கருத்தக்களின் தேவை ஏற்பட்டது. இத்தகைய சூழலில் தோன்றிய அறக் கருத்துக்கள், சமூகத்தின் தேவையை முழுமையாக நிறைவேற்றியது மட்டுமன்றி சமூக அமைப்புடனே தொடர்ந்து வந்து காலத்தை வென்று நின்றன.

## அறம்

திருவள்ளுவர் அறம் என்ற சொல்லை தருமம், இல்லறம், துறவறம், வழக்கம், முறைமை,ஈகை, அறநூல், அறக்கடவுள், புண்ணியம் என்னும் ஒன்பது பொருட்களில் கையாண்டுள்ளதாக க.த.திருநாவுக்கரசு, திருக்குறளும் இந்திய அறநூல்களும் என்ற தம் நூலில் குறிப்பிட்டுள்ளாhர். "அல்லவை தேய அறம் பெருகும்" (குறள் - 96) என்கிறார் திருவள்ளுவர். நல்ல பண்புகளையே ஒழுக்கம் என்கிறோம் வாழ்வில் ஒவ்வொருவருக்கும் இனிய பண்புகளே உயிர் போன்றவை. ஒழுக்கம் புகழையும் மேன்மையையும் சிறப்பையும் தரும். மற்றவர்களுக்குத் துன்பங்களைச் செய்யத் தூண்டும் தீய எண்ணம் செயல், சொல் ஆகியன இல்லாமல் இருப்பதும் அறம் ஆகும் என்பதை,

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்" (குறள் 35)

என்ற குறள் மூலம் கூறுகிறார் வள்ளுவர் அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தில் மனம் மாசின்றித் தூய்மையாக இருக்க வேண்டுமென்பதை,

"மனத்துக்கண் மாசில னாத லதனைத்தற
னாகுல நீர பிற"(குறள் 34)

என்று கூறியுள்ளார்.

## கல்வி அறம்

தனிமனிதன் சமூக உயர்வினைப் பெற கல்வி அவசியமான ஒன்றாகும் சமூகத்தின் கருத்துப் பரிமாற்றத் தேவையால் முதல் வெற்றி மொழி. மொழியின் வளர்ச்சியால் தோன்றியது கல்வியாகும். ஒரு நாடு அதீத வளர்ச்சியடைய வேண்டும். மக்கள் அனைவரும் விழிப்படைய வேண்டும் என்றால் அங்கு அறியாமை அகல வேண்டும் அறியாமை அகல வேண்டுமாயின் அவர்களுக்குக் கல்வியறிவு மிக முக்கியமாகும். இதனை வலியுறுத்தியே இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்தாமல் அவர்களுக்கு கல்வி கொடுக்க வேண்டும் என்ற உயர்ந்த சட்டத்தை நிறைவேறியுள்ளது. ஒரு நாட்டின் முன்னேற்றம் கல்வியில்தான் அடங்கியுள்ளது.

"எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (குறள் 392)

எண்ணும் எழுத்தும் வாழும் உயிர்க்கு இரண்டு கண்களைப் போன்றவை இந்தக் கண்கள் வாயிலாக அறியாமை என்னும் இருளை அகற்றி சமூகம் உய்விக்கக் கூடிய நற்செயல்; செய்ய முடியும். நல்லியல்பு கொண்ட மனிதன்

செய்கின்ற செயல்கள் சமூகம் நன்மை பெறத்தக்க வகையில் அமையும் என்கிறார் வள்ளுவர்.

## அரசியலறம்

சமூகக் கட்டமைப்பின் ஒரு அசைக்க முடியாத தூண் அரசியலாகும். மனிதனை 'அரசியல் விலங்கு' என அரிஸ்டாட்டில் கூறியுள்ளார். அரசியல் சமூக நலன் சார்ந்து சமூக மக்களின் விடுதலை , உரிமைகள், உடமைகளுக்கு உத்திரவாதம் வழங்கல், மூல வளங்களை பகிர்ந்து கொடுப்பது, நற்காரியங்களின் பொருட்டு அதிகாரம் பகிர்வு போன்றவையே அரசியலறமாகும். இதனை 'பூமி விரும்பு' என்னும் ஆத்திச்சூடி பாடலில் ஔவையார் ஒரு அரசனோ, அல்லது அரசின் கீழ் வாழும் மக்களோ தன்னுடைய பூமியின் மீது அன்பு மிக்கவராக இருக்க வேண்டும். அரசர்கள் மக்களையும் மண்ணையும் நேசித்தால் தான் நல்லாட்சி ஏற்படும். மக்கள் தங்களுடைய அரசனையும் நாட்டையும் விரும்பினால் தான் நல்லரசு நடத்த நல் ஒத்துழைப்பு கிடைக்கும் என்கிறார். இக்கருத்தை திருவள்ளுவர் பொருட்பாலின் செங்கோண்மை என்னும் அதிகாரத்தில்

"குடிதழீஇக் கோலோச்சி மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு."                    ((குறள்.544)

என்ற குறளில் உணர்த்தியுள்ளார். இக்கருத்தின் வழியாக வள்ளுவரின் அரசியலறத்தை அறிய முடிகிறது.

## இல்லறம்

பண்டைய தமிழர் குடும்ப வாழ்வு மிகவும் உயர்ந்தது. அவர்களுக்கு அறம் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதி அன்று வாழ்வு முழுவதுமே அறமாகும். எனவே தான் குடும்ப வாழ்க்கையை இல்லறம் என்றனர்.

ஒத்த அன்புடைய தலைவனையும் தலைவியையும் பெற்றோர் வரைந்து கொடுத்தலையே திருமணம் என்கிறார் தொல்காப்பியர் இதனை,

"கற்பெனப் படுவது கரணமொடு புரைக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள் வதுவே"(தொ.கற்பியல் 140)

என்று கூறுகிறார்.

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்கிறார்வள்ளுவர். ஆதலின் குடும்பம் அறமும் வாழ்வும் நிறைந்ததாகத் திகழ்கின்றது. அன்பும் அறனும் உடையவராகக் கணவனும் மனைவியும் கூடிவாழும் வாழ்க்கை

இல்வாழ்க்கை ஆகும். கணவனும் மனைவியும் மனமொத்து தன்னலமின்றி ஒருவர் நலனில் ஒருவர் மனமொன்றி வாழவேண்டும் உடலாலும் உள்ளத்தாலும் கட்டுண்டு கிடக்கும் குடும்ப உறவின் உயர்வும் துய்த்தாரே உணர வல்லது. அதனால்தான் குறுந்;தொகைத் தலைவி

"இம்மை மாறி மறுமை யாகினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளே"(குறுற்.பா.49)

என்கிறார்.

இவ்வாறு போற்றப்பட்ட குடும்ப வாழ்வு இன்று கால மாற்றத்தாலும், மேனாட்டு நாகரிகத் தாக்கத்தாலும் சிக்கல் நிறைந்ததாய் மாறி வருகிறது. உடலாலும் உள்ளத்தாலும் ஒன்றுபட வேண்டிய தலைவன், தலைவியர் காசாலும் கருத்தாலும் துண்டுபடுகின்றனர்.

"மங்களம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு" (குறள்.60)

என்று இல்லறத்தின் பயன் நன்மக்கட்பேறு என்பார் திருவள்ளுவர். அதுமட்டுமன்று நல்ல பண்புடைய மக்களைப் பெற்றால் ஒருவனுக்கு ஏழு பிறவியிலும் தீமை சேராது என்பர்.இன்றே குடும்பம் சிதைவதால் மக்கட்பேறு கேள்விக்குறியாக உள்ளது.

பிறன் மனை நயந்தவன் சிறப்புப் பெறுவதில்லை என்கிறது கம்பராமாயணம்.; பிறன் மனைவியை விரும்பியதால,; தான் மட்டும் அல்லாமல் தன் மனைவி மக்களையும் அழிந்தவன் இராவணன். ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்ந்ததால் போற்றப்படுபவன் இராமன்.

கற்பு எனப்படுவது கணவன் கூறுவதை எல்லாம் கேட்டு மறுப்புக் கூறாது வாழும் வாழ்வு என்று இலக்கணம் வகுக்கும் ஆண்களாலும் சில குடும்ப வாழ்வுகள் சிதைகின்றன.கணவனும் மனைவியும் மனமொத்துத் தன்னலமின்றி விட்டுக்கொடுத்து வாழ்வதால் குடும்பம் கோவிலாகும். வாழ்வு சிறக்கும்.

"குடும்பம் உயர ஊர் உயரும்
ஊர் உயர நாடு உயரும்
நாடு உயர உலகம் உயரும்"

மேலும் தமிழ்ச் சமுதாய மலர தமிழ்ப்பண்பாடு மணம் வீசத் தேவையான அறம் இல்லறம். ஔவையார் அறவுரைப் படி இல்லறம் அல்லது நல்லறம் அன்று ஆதலால் அவ்வறனைப் போற்றி வளர்ப்போம்.

## தொகுப்புரை

ஒரு தனிமனிதனும் ஒரு சமுதாயமும் மேன்மை அடைந்து உயர்வு பெறுவதற்கு நல்லொழுக்க நெறி முறைகளை காரணமாக அமைகின்றன. கற்பவர் உள்ளத்தில் கவினுறப் பதிந்து நீங்காமல் நிற்கும் அறக் கருத்துக்கள் பல அற இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. திரிகடுகத்தில்

மனைவியைக் கோலால் அடிக்காதே!

ஆற்றில் பழகாத துறையில் இறங்காதே!

ஆசிரியர் இல்லாத ஊர் அறிவு பெற்று விளங்காது!

இன்பதுன்பங்களில் பங்குகொண்டு சமுதாய ஒத்துழைப்பு இல்லாதவர் பக்கத்தில் குடியிருப்பதால் பயன் ஒன்றுமில்லை!

எவ்வளவு கற்றிருந்தாலும் தன்னை வியந்து தருக்கிக் கொள்ளாதே!

என்ற பாடல் வரிகளில் இல்லற வாழ்க்கையின் நுன்மையை எடுத்துக் காட்டுகிறது.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்” (குறள் - 50)

என்ற குறளில் வாழ்வாங்கு வாழ்பவன் புகழ் வானுலகம் வரை செல்லும் என்கிறார் வள்ளுவர்.

சமூகம் தழைக்கச் சொல்லப்படும் அறக் கருத்துக்கள் மாறாத நிலைப்புத் தன்மை கொண்டவையாகும். மனிதன் வாழ்க்கைத் தகவுகள் மாறுபட்டுக் கொண்டே இருந்தாலும் வாழ்க்கையுடன் ஒன்றிய அறக்கருத்துக்கள் மட்டுமே சூழ்நிலைத் தகவுகளுக்கு மாறுபடாமல் வாழ்க்கையை நெறிப்படுத்தி வருகின்றன.

## துணைநூற்பட்டியல்


1. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-1,மே2011
2. டாக்டர் கொ.மா.கோதண்டம் (உ.ஆ), திருக்குறள், நியூ செஞ்சூரி புக் ஹவுஸ் (பி) லிட.;, சென்னை-98, முதல்பதிப்பு,ஆகஸ்ட் 2011
3. நச்சினார்க்கினியம் (உ.ஆ), தொல்காப்பியம், கழக வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-1, 1966,ப.163
4. முனைவர். வி.நாகராசன் (உ.ஆ),குறுந்தொகை பாவை பிரிண்டர்ஸ்,சென்னை-14, முதல்பதிப்பு ஏப்ரல்2004, ப.129